# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

## விளையாட்டு விடுதி, சிறப்பு விளையாட்டு விடுதி மற்றும் முதன்மை நிலை விளையாட்டு விடுதிகளில் மாணவ / மாணவியர் சேர்க்கை

## செய்திக் குறிப்பு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலமாக பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப நல்ல பயிற்சி மற்றும் தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய 28 விளையாட்டு விடுதிகள், 2 சிறப்பு விளையாட்டு விடுதிகள் மற்றும் 5 முதன்மை நிலை விளையாட்டு விடுதிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் 2016–2017ம் வருடத்தில் மாணவ / மாணவியர்களுக்கான சேர்க்கை நடைபெற்றுவருகிறது

இவ்விளையாட்டு விடுதிக்கான மூன்றாம் கட்ட தேர்வுப்போட்டிகள் கீழ்கண்ட விதிமுறைகளின் படி நடைபெற உள்ளது.

1. தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் வென்றவர்கள்
2. தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள்
3. மாநில அளவிலானப் போட்டியில் முதல் 3 இடங்களில் பதக்கம் பெற்றவர்கள்
4. மாநில அளவிலானப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் மற்றும் தகுதி வாய்ந்த வீரர்/வீராங்கணையர்

**<u>பள்ளி மாணவ/ மாணவிகள் மற்றும் கல்லூரி மாணவ/ மாணவிகளுக்கான வயது வரம்பு தகுதிகள்</u>**

1. **விளையாட்டு விடுதிகளில் சேருவதற்கான தகுதி –7, 8,9 மற்றும் 11–ஆம் வகுப்பு**
2. **சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேருவதற்கான (கல்லூரி மாணவ/மாணவிகள்) வயது வரம்பு – 21 வயது நிரம்பப் பெற்றவர்கள்**
3. **முதன்மை நிலை விளையாட்டு விடுதியில் சேருவதற்கான தகுதி – 6, 7 மற்றும் 8 –ஆம் வகுப்பு**

மேற்கண்ட தகுதிகள் வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கான மூன்றாம் கட்ட மாநில அளவிலானத் தேர்வு வரும் 12.07.2016 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் நடைபெற உள்ளது.

### <u>விளையாட்டு விடுதிகளுக்கான</u>
### <u>விளையாட்டுத் தேர்வுப் போட்டிகள் நடைபெறும் விபரம்</u>

| வ.எண். | மாணவர்களுக்கான விளையாட்டுக்கள் | மாநிலத்தேர்வு நடைபெறும் இடம் | தேதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 01. | தடகளம் | நேரு விளையாட்டரங்கம், சென்னை | **12.07.2016** அன்று காலை **8. 00 A.M** |
| 02. | கால்பந்து | | |
| 03. | வளைகோல்பந்து | | |
| 04. | கிரிக்கெட் | | |
| 05. | பேட்மிண்டன் | | |
| 06. | நீச்சல் | | |
| 07. | மேசைப்பந்து | | |
| 08. | கூடைப்பந்து | | |
| 09. | டென்னிஸ் | | |
| 10. | ஜூடோ | | |
| 11. | குத்துச்சண்டை | | |
| 12. | கபாடி | | |
| 13. | கைப்பந்து | | |
| 14. | கையுந்துபந்து | | |
| 15. | டேக்வோண்டா | | |

| வ.எண். | மாணவிகளுக்கான விளையாட்டுக்கள் | மாநிலத்தேர்வு நடைபெறும் இடம் | தேதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 1 | தடகளம் | நேரு விளையாட்டரங்கம், சென்னை | 12.07.2016 அன்று காலை 8. 00 A.M |
| 2 | கால்பந்து | | |
| 3 | வளைகோல்பந்து | | |
| 4 | பேட்மிண்டன் | | |
| 5 | நீச்சல் | | |
| 6 | கூடைப்பந்து | | |
| 7 | டென்னிஸ் | | |
| 8 | ஜூடோ | | |
| 9 | குத்துச்சண்டை | | |
| 10 | கபாடி | | |
| 11 | கைப்பந்து | | |
| 12 | கையுந்துபந்து | | |
| 13 | டேக்வோண்டா | | |
| 14 | பளுதூக்குதல் | | |
| 15 | வாள்சண்டை | | |

**சிறப்பு விளையாட்டு விடுதிகளுக்கான**
**விளையாட்டுத் தேர்வுப் போட்டிகள் நடைபெறும் விபரம்**

| வ.எண். | மாணவர்களுக்கான விளையாட்டுக்கள் | மாநிலத்தேர்வு நடைபெறும் இடம் | தேதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 01. | தடகளம் | நேரு விளையாட்டரங்கம், சென்னை | 12.07.2016 அன்று காலை 8. 00 A.M |
| 02. | கூடைப்பந்து | | |
| 03. | குத்துச்சண்டை | | |
| 04. | கையுந்துபந்து | | |
| **மாணவிகளுக்கான விளையாட்டுக்கள்** | | | |
| 01. | தடகளம் | | |
| 02. | கால்பந்து | | |
| 03. | ஜூடோ | | |
| 04. | கையுந்துபந்து | | |

**முதன்மை நிலை விளையாட்டு விடுதிகளுக்கான**
**விளையாட்டுத் தேர்வுப் போட்டிகள் நடைபெறும் விபரம்**

| வ.எண். | மாணவர்களுக்கான விளையாட்டுக்கள் | மாநிலத்தேர்வு நடைபெறும் இடம் | தேதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 01. | தடகளம் | நேரு விளையாட்டரங்கம், சென்னை | 12.07.2016 அன்று காலை 8. 00 A.M |
| 02. | பேட்மிட்டன் | | |
| 03. | குத்துச்சண்டை | | |
| 04. | ஜிம்னாஸ்டிக்ஸ் | | |
| 05. | டென்னிஸ் | | |
| 06. | நீச்சல் | | |
| 07. | டேக்வோண்டா | | |
| **மாணவிகளுக்கானவிளையாட்டுக்கள்** | | | |
| 01. | பேட்மிட்டன் | | |
| 02. | நீச்சல் | | |
| 03. | ஜிம்னாஸ்டிக்ஸ் | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுப்பட்டியலின்படி தேர்வு காலை 8. 00 A.M. முதல் தேர்வு நடைபெற உள்ளது.

மேற்காணும் விளையாட்டுக்களில் நடைபெறும் மாநில அளவிலான மூன்றாம் கட்டத்தேர்வில் பங்கேற்றிடும் மாணவ / மாணவியர்கள் அதற்கான விண்ணப்பத்தினை www.sdat.tn.gov.in எனும் இவ்வாணையத்தின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் விளையாட்டில் பங்கேற்ற அசல் சான்றுகளுடன் மேற்குறிப்பிட்ட தேதிகளில் காலை 8.00 மணி அளவில் சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் நேரில் ஆஜராக வேண்டும்.

தகுதி வாய்ந்த விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கு நேரிடையானத் தேர்வு நடைபெற்று விளையாட்டு விடுதிகளில் காலியாக உள்ள இடங்களில் சேருவதற்கான அனுமதி ஆணை வழங்கப்படும்.